**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.380** **நாள் : 12.11.2025**

**வடகிழக்குப் பருவமழை எதிர்கொள்ள அனைத்துத் துறை அலுவலர்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும், தற்போது நடைபெற்று வரும் பணிகள் அனைத்தும் விரைந்து முடித்திட வேண்டும் என மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்.**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திருசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில்.மா. இன்று )12.11.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட இராஜா அண்ணாமலைபுரம், அருள்மிகு கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியில், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பருவமழையின்போது எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து குறிப்பாக சேவை துறைகளை ஒருங்கிணைத்து பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தியதன் அடிப்படையில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவமழையினையொட்டி பெருநகர சென்னை மாநகராட்சியில் தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதியில் குறிப்பாக வார்டு -121, 122, 123, 124, 125, 126 மற்றும் 171 ஆகிய வார்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பணிகள், மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி, குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், பொதுப்பணித்துறை, நீர்வளத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், நகர்ப்புற மேம்பாட்டு வாரியம், தேசிய நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுடன் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதியில் கடந்த 4 ஆண்டுகளில் 267 தார்சாலைகள், 34 சிமெண்ட் கான்கீரிட் சாலைகள், 14 பேவர் பிளாக் சாலைகள், அமைக்கப்பட்டுள்ளதையும், 1,073 மீ. மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் முடிக்கப் பெற்றும் 212 மீ. பணிகள் நடைபெற்றும் வருவதையும், மழைநீர் வடிகால் தூர் வாரும் பணிகள் 48.62 கி.மீ. தூரமும், வண்டல் மண் சேகரிப்பு தொட்டியின் மூலமாக 1,060 நீளம் மீட்டர் தூரமும் தூர் வாரும் பணி நடைபெற்றதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, கடந்த 4 ஆண்டுகளில் மாம்பலம் கால்வாய் மற்றும் நந்தனம் கால்வாய்களில் 2.70 கி.மீ. தூரமும் மாநகராட்சி மற்றும் நீர்வளத்துறை மூலமாக நீர்வழிகால்வாய்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும், 7 வார்டுகளில் உள்ள 2,432 வண்டல் மண் சேகரிப்பு தொட்டிகளில் வண்டல் மண் தூர்வாரப்பட்டுள்ளதையும், இந்த வார்டுகளில் உள்ள சாலைப்பள்ளங்கள் தற்பொழுது, சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதிகளில் கண்டறியப்பட்ட, மழைநீர் தேங்கும் தாழ்வான பகுதிகளில் இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இப்பகுதிகளில் 3 எண்ணிக்கையிலான 100HP உயர்திறன் கொண்ட மோட்டார் பம்புகளும், 19 எண்ணிக்கையிலான 25 HP திறன்கொண்ட டிராக்டர் மோட்டார் பம்புகளும், 13 எண்ணிக்கையிலான மரக்கிளைகளை வெட்டும் இயந்திரங்கள், 5 எண்ணிக்கையிலான சமையற்கூடங்கள் தயார் நிலையிலும் வைக்கப்பட்டுள்ளதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்புடைய துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்.

மேலும், மீண்டும் அடுத்த வாரம் பருவமழை தொடங்குவதாக வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது. ஆகையினால் அனைத்து துறை அலுவலர்களும் வடகிழக்குப் பருவமழை எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்க வேண்டும், தற்போது நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் முடித்திட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.த.வேலு, மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர். கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர்கள் திரு. எஸ்.மதன்மோகன் (தேனாம்பேட்டை), திரு.ஆர்.துரைராஜ் (அடையாறு), மாமன்ற உறுப்பினர்கள் திரு. கி. மதிவாணன், திருமதி மோ.சரஸ்வதி, திருமதி அ.ரேவதி, திருமதி அமிர்தவர்ஷினி, திருமதி இரா.கீதா மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் /மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**